**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 85/2021**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 02.02.2026 | | |
| பெயர்: | வெங்கடாஜலபதி (PW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | நாராயணசாமி |
| கிராமம்: | புதுப்பட்டினம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | அஞ்சல் துறை (ஓய்வு) | வயது : | 62/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 02.02.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.21)**

1. தாவா வழக்கு 100/1 என்ற சர்வே எண்ணுக்கானது. தாவா சொத்துக்களை 3 அயிட்ட சொத்துக்களாக வழக்குரையில் காண்பித்துள்ளேன். A ஷெடியூலில் 2 குழி நிலம் உள்ளது. B ஷெடியூலில் 10 குழி நிலம் உள்ளது. A ஷெடியூலின் நான்கெல்லை என்பது இருளர் பட்டாவிற்கு தெற்கு, இளையராஜா (எ) ராஜ்குமார் வீடு கொல்லைக்கு வடக்கு, தார் சாலைக்கு கிழக்கு, பிரதிவாதி மற்றும் ரத்தினம் அனுபவித்து வரும் புஞ்சைக்கு மேற்கு என்பதாகும்.

2. B ஷெடியூலின் நான்கெல்லை என்பது தார் சாலைக்கு கிழக்கு, பிரதிவாதி மற்றும் ரத்தினம் அனுபவித்து வரும் புஞ்சைக்கு மேற்கு, இருளர் பட்டாவிற்கு தெற்கு, இளையராஜா (எ) ராஜ்குமார் வீடு கொல்லைக்கு வடக்கு என்பதாகும். A மற்றும் B ஷெடியூல் சொத்துக்களுக்கு ஒரே நான்கெல்லை தான் என்றால் சரிதான். நான் 12ம் வகுப்பு படித்துவிட்டு அஞ்சல்துறையில் தபால்காரராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். தாவா கிராமத்தில்தான் நான்

பணியாற்றினேன் என்றால் சரிதான்.

3. தாவா சொத்து யாருக்கு உரிமையானது என்றால் எனது தந்தை பெயரில் உள்ளது, அனுபவம் என்னிடம் உள்ளது. தாவா சொத்து எனது தந்தைக்கு உரிமையானது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் குத்தகை உரிமை பதிவேடு, கிராம நிர்வாக அலுவலர் சான்று, சொத்து பதிவேடு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் யாரும் கிடையாது. எனது தகப்பனாருக்கு நான் ஒரே மகன். எனது தாயார் இருக்கிறார், அவர் பெயர் சாரதாம்பாள்.

4. எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் வருடம் ஞாபகமில்லை. ஆனால் சுமாராக 30 வருடங்களுக்கு முன்பு இருக்கும். எனது தகப்பனாரின் இறப்பை உறுதி செய்ய இறப்பு சான்றிதழ் ஏதும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல வாரிசு சான்றிதழும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்று பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல, VAO எனது அனுபவத்தில் இருப்பதற்கான சான்றிதழை கொடுத்துள்ளார்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 12.33)**